**DEPOSITION OF WITNESS**

(See Rule 42)

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF FAST TRACK COURT AT MAGISTERIAL LEVEL, PATTUKKOTTAI.**

| | |
|---|---|
| **STC. No.** | **78/2025** |
| **பெயர்: PW-1** | **நாடிமுத்து ( PW-1)** |
| **தந்தை பெயர் :** | **சுந்தரராசு** |
| **வயது:** | **60/2026** |
| **ஊர்:** | **பட்டுக்கோட்டை** |
| **தாலுக்கா** | **பட்டுக்கோட்டை** |
| **வேலை** | **Plumbing Contractor** |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 11th August 2026.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :**

**(சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலரான திரு. M.Usha (Assistant) என்பவரால் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது).**

1. ஆஜர் எதிரியை தெரியும், அவர் பெயர் தவனீஸ்வரன். எனது பூர்வீக ஊர் என்னவென்றால், பட்டுக்கோட்டை. எதிரியை எத்தனை ஆண்டுகளாக தெரியும் என்றால், சுமார் 7 ஆண்டுகளாக தெரியும். எதிரி என்ன வேலை செய்கிறார் என்றால், CISF –ஆக இருக்கிறார்.

2. எதிரியின் மாத வருமானம் என்னவென்றால், ரூ.1 இலட்த்திற்கு மேல் இருக்கும். எதிரி என்னிடம் எதற்காக கடன் வாங்கினார் என்றால், மதுரையில் வீடு கட்டுவதற்காக வாங்கினார். எதிரிக்கு நான் எவ்வளவு தொகை நான் ஏற்பாடு செய்து கொடுத்தேன் என்றால், ரூ.10 இலட்சம் ஆகும்.

3. நான் ஏதேனும் காசோலை மோசடி வழக்கு நடத்திவருகிறேன் என்றால், நடத்திவருகிறேன். மொத்தம் எத்தனை வழக்கு என்றால், 1 ஆகும். எந்த நீதிமன்றத்தில் நடத்திவருகிறேன் என்றால், இந்த நீதிமன்றத்தில் தான் .

4. மதுரையில் வீடு கட்டுவதற்காக கடன் வாங்கினார் என்ற விபரத்தினை எதிரி என்னிடம் தனியாக கூறினாரா அல்லது சாட்சியம் முன்னிலையில் கூறினாரா என்றால், சாட்சியம் முன்னிலையில் கூறினார்.

5. CISF–ல் என்ன பதவியில் இருக்கிறார் என்றால், தெரியாது, CISF என்று தான் சொன்னார். எதிரியின் மாத வருமானம் ரூ.1 இலட்சம் என்று எனக்கு எப்படி தெரியும் என்றால், எதிரி மற்றும் அவரது மாமனார் கூறினார்.

6. நான் எதிரிக்கு கடன்கொடுத்த ரூ.10 இலட்சத்தை வருமானவரியில் காட்டியுள்ளேனா என்றால், இல்லை. ரூ.10 இலட்சம் எனக்கு எப்படி கிடைக்கப்பெற்றது என்றால், நகையை அடமானம் வைத்தேன், கையிருப்பு பணம் இருந்தது. நகையை எந்த தேதியில் அடமானம் வைத்தேன் என்றால், 2024 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ரூ.5 இலட்சத்திற்கு Bank of baroda, பட்டுக்கோட்டை கிளையில் அடகு வைத்தேன். அதற்கான ரசீது இருக்கிறதா என்றால், இருக்கிறது. ரூ.5 இலட்சம் கையிருப்பாக இருந்தது.

7. ரூ.10 இலட்சத்தை யார் யார் சாட்சி முன்னிலையில் கொடுத்தேன் என்றால், காசிநாதன் மகன் உத்திராபதி, கன்டியன் தெரு, பட்டுக்கோட்டை என்பவரின் முன்னைிலையில் கொடுத்தேன்.

8. நான் இங்கு தொடுத்துள்ள மற்றொரு வழக்கின் வருடம் என்னவென்றால், ஞாபகம் இல்லை.

9. கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக என்மீதோ அல்லது நான் மற்றவர் மீதோ காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால், இல்லை.

10. ரூ.10 இலட்சம் பெரிய தொகை என்பதால் ஒரு சாட்சியை மட்டும் வைத்து ஏன் கொடுத்தேன் என்றால், எதிரியை நம்பிதான் கொடுத்தேன். எந்த தேதியில் எதிரிக்கு கடன்கொடுத்தேன் என்றால், 08.12.2024 ஆகும். 08.12.2024 என்பது என்ன கிழமை என்றால், ஞாபகம் இல்லை.

**(எதிரி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)**

மேற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து / கைரேகை செய்யப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், (நடுவர் நிலை)
பட்டுக்கோட்டை.